விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 317 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 15 புதன்கிழமை (01.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## அரச ஊழியர்களுக்கு 50 சதம் கூட சம்பள உயர்வு வழங்க முடியாது

### ரணிலின் கருத்துடன் முரண்பட்ட அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

"அரச ஊழியர்களுக்கு 50 சதம் கூட சம்பள உயர்வு வழங்க முடியாது" என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கெஸ்பேவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து 15

## மண்ணெண்ணெய், டீசல் விலைகள் அதிகரிப்பு

### பெற்றோல் விலை குறைப்பு

(கொழும்பு)

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலைகளை அதிகரிக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 3 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 423 ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. 15

### யாழ்.நகரில் பிக்மீ ஆட்டோ சாரதி மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பிக்மீ செயலி ஊடாக தனக்கு கிடைக்கப்பெற்ற சேவையை யடுத்து சேவை பெறுநரை ஏற்றச் சென்ற முச்சக்கரவண்டி சாரதி 15

### புதிய வேலை வாய்ப்பு சட்டம்
அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

புதிய வேலைவாய்ப்பு சட்டத்தை தயாரிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கான்செப்ட் பேப்பரை அடிப்படையாகக் கொண்டு கருத்தாக்க பத்திரத்தை தயாரிக்க ஒரு வரை 15

## வற் வரி 18 சதவீதமாக உயர்வு

# பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கும்

### மக்களுக்கு மேலும் நெருக்கடி



*(கொழும்பு)*

வற் (Vat) எனப்படும் பெறுமதி சேர் வரியினை 18 சதவீதமாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனால் பொருட்கள், சேவைகளின் விலைகள் மேலும் அதிகரிக்கவுள்ளன. மக்களுக்கு இதன்மூலம் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கவுள்ளதோடு நெருக்கடி நிலையும் உருவாகியுள்ளது.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## வடக்கு மாகாணத்துக்கான அதிபர் தரம் III நியமனங்கள்

### நவம்பர் 4 யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அதிபர் சேவை தரம் III இல் வடக்கு மாகாணத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு எதிர் வரும் 4ஆம் திகதி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் என வட மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார். 02

## 3 மாதங்களுக்கு ஒருமுறை மின் கட்டணம் திருத்தப்படும்

### எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர



(கொழும்பு)

3 மாதங்களுக்கு ஒரு முறை மின்கட்டணம் திருத்தப்படும் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆண்டுக்கு 3 மாதங்களுக்கு ஒருமுறை மின் 15

## தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு என்ற ரணிலின் வாக்கு நிறைவேறவில்லை

### ஐரோப்பிய குழுவிடம் சம்பந்தன்



(கொழும்பு)

தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதியளித்திருந்தாலும், அது தொடர்பில் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என ஐரோப்பிய ஒன்றிய பாராளு 02

துறைசார் நிபுணர்களின் வெளியேற்றம்

## இந்நாட்டின் அழிவுக்கான ஆரம்பமே – சிறீதரன் எம்.பி

(கிளிநொச்சி)

அரசியல், பொருளாதார ரீதியாக உறுதித்தன்மையற்றிருக்கும் இந்த நாடு, மீட்சியற்ற நிலையில் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருப்பதைத்தான், நாளாந்தம் நாட்டை விட்டு வெளியேறும் துறைசார் நிபுணர்கள், வல்லுநர்கள் மற்றும் புத்திஜீவிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு பறைசாற்றி நிற்கிறது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு:05.04.1946 உதிர்வு:02.10.2023

## திருமதி நகுலாம்பிகை வாமதேவன் (இராணி)

கடந்த 02.10.2023 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி.நகுலாம்பிகை வாமதேவன் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (01.11.2023) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மற்றும் அன்னாரின் பிரிவால் துயருற்றிருந்த வேளை பலவழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.50.பெருங்கோட்டை வைரவர் கோயில்,
பண்டத்தரிப்பு வீதி,
தெல்லிப்பளை கிழக்கு.

(C-7533)

குடும்பத்தினர்

## வடக்கு...

மத்திய கல்வி அமைச்சினால் இலங்கை அதிபர் சேவைக்கு தெரிவு செய்யப்பட்டு வடக்கு மாகாணத்திற்கு வழங்கப்பட்ட 401 நியமனதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு 2023.11.04 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளமையினால் நியமனம் செய்யப்படவுள்ள நியமனதாரிகள் 8.00 மணிக்கு பிந்தாமல் உரிய முறையில் வருகைதரல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட நியமனதாரர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் மூலம் தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தி நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் நியமனதாரர்கள் தவிர்ந்த எவரும் பெற்றுக்கொள்ள முடியாது தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட தொடர்பிலக்கத்தினைக் குறித்துக் கொள்வது தங்களுக்கான ஆசனங்களை இனங்காண்பதற்கு இலகுவாய் அமையும்.

இது தொடர்பான விபரங்களை வட மாகாண சபை இணையத்தளம் www.np.gov.lk வடமாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www.edumin.np.gov.lk ஆகியவற்றில் பார்வையிடமுடியும் என அறிவித்துள்ளார். (ம-7)

## தமிழ்த் தேசிய பிரச்சினை...

மன்றக் குழுவிடம் இரா.சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார்.

இந்த குழுவினருக்கும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போது, இந்த விடயம் தொடர்பில் பேசப்பட்டதாக கட்சியின் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றக் குழுவினருக்கும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போது இலங்கையில் மேற்கொண்டு வரும் திருத்தங்கள், தொடர்பில் எம்மிடம் கலந்தாலோசித்ததாகவும் தமிழ் தேசியம் சம்மந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் அவர்களிடம் தெரியப்படுத்தியதாகவும் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ம-7)


**கொழும்பு விலையில்...**
**யாழ்ப்பாணத்தில் கோழிகள் விற்பனைக்கு உண்டு**

- புறோயிலர், கல்பேட், பேரன்ஸ், ஊர்க்கோழிகள் இவை அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
- சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்.
- வியாபாரிகளுக்கும் சாப்பாட்டு கடைகளுக்கும் விலைக் கழிவு உண்டு.
- 1Kg புறோயிலரின் விலை - 650/=
- மொத்த கொள்முதலுக்கு ரான்ஸ்போட் இலவசம்



**நியூ சிற்றி பாம்**
**நியூ சிற்றி கோழிக்கடை**
இல.8, சின்னக்கடை மார்க்கெட்
குருநகர், யாழ்ப்பாணம்.
(17632)


# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 02 . 1946



மறைவு 28 . 10 . 2023

## நாகலிங்கம் கணேசு
### (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கணேசு அவர்கள் கடந்த 28.10.2023 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் V.S கணபதிப்பிள்ளை - பத்மாவதி தம்பதியினரின் அன்பு மருமகனும் பாலரூபியின் அன்புக் கணவரும் தேவகி (நோர்வே), பகிரதி, கமலதாசன்(நன்நடத்தை உத்தியோகத்தர் பருத்தித்துறை நீதி நிர்வாக பிரிவு), உஷாந்தினி(ஆசிரியர்-யா/ மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விக்னதாசன் (நோர்வே), கார்த்திகா(தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை), சுதாகரன் (ஆசிரியர்-யா/ வண். ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரவீன், பிரித்தா, தருண்ஜன், கவிஷ்ணா, அபீரன், ஆதுரி ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர்களான நல்லம்மா, குணசிங்கம், நாகேஸ்வரி மற்றும் பராசக்தி, தேவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2023) புதன்கிழமை 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

முதலியார் கனகசபை வீதி,
மானிப்பாய்.

077 601 2996
021 225 6550

(C-7537)

தகவல் :
குடும்பத்தினர்

## சாவகச்சேரி பிரதேச சபை
## படவரைஞர்களை பதிவு செய்தல் / புதுப்பித்தல் - 2024

2024ம் ஆண்டு சாவகச்சேரி பிரதேச சபையில் கட்டட அனுமதிகளுக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் புதுப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் விடயங்களினைக் கருத்தில் கொண்டு, உரிய ஆவணங்களுடன் 20.12.2023ம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் உரிய கட்டணத்தை செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளலாம்.

சேவை நாடி வருவோர் இலகுவில் சேவை பெறக்கூடிய வகையில் தென்மராட்சி பிரதேச செயலக எல்லைக்குள் அலுவலகம் ஒன்றினைக் கொண்டிருப்பவர். அல்லது இவ் எல்லைக்குள் வதிவிடத்தைக்கொண்டு சேவையை வழங்கக்கூடியவர் விண்ணப்பிக்கலாம்.

- புதிதாக பதிவு செய்ய விரும்புவோர் மற்றும் புதுப்பித்துக் கொள்ள விரும்புவோர் NVQ -Level - 5 In Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ள பட்சத்தில் உரிய சான்றிதழுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம். அத்துடன் NVQ -4 தேசிய சான்றிதழ் தர படவரைஞர் (கட்டடம்) கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ளவர்கள் NVQ Level 5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் கடிதத்தினை கல்வி நிறுவனத்திடம் இருந்து பெற்று சமர்பிக்கப்பட வேண்டும் எனும் நிபந்தனைகளுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
- ஏற்கனவே 2023 படவரைஞராக பதிவு செய்வதற்காக விண்ணப்பித்துள்ளவர்கள் NVQ level 5 Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்தவர்கள் உரிய சான்றிதழினை சமர்ப்பிக்க வேண்டும். அல்லது NVQ-4 தேசிய சான்றிதழ்கள் தர படவரைஞர் (கட்டடம்) சான்றிதழ்களுடன் NVQ level 5 in Drafting Technology (Buildings) "கற்கைநெறியினை தொடர்வதினை உறுதிப்படுத்தும் கடிதத்தினை கல்வி நிறுவனத்திடம் இருந்து பெற்று சமரப்பிக்கப்பட வேண்டும்" எனும் நிபந்தனையுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
- மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவு செய்தல் / பதிவுகளை புதுப்பிக்க தவறும் பட்சத்தில் எமது பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான படவரைஞர்களாக செயற்பட முடியாது.
- மேலதிக விபரங்கள், நிபந்தனைகளை சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.க.சந்திரகுமார்
செயலாளர்
சாவகச்சேரி பிரதேச சபை

(C-7538)

திகதி : 01.11.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு-கிழக்கு
# விகாரைகளை அரசு பாதுகாக்க தவறினால் பாரிய போராட்டங்கள் வெடிக்கும்
## மேர்வின் எகத்தாளம்

**(கொழும்பு)**
**வடக்கு- கிழக்கிலுள்ள விகாரைகளை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் பௌத்தர்களை ஒன்றிணைத்து அரசாங்கத்திற்கு எதிராக பாரிய போராட்டங்கள் நடத்தப்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**



ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள காணொளிப் பதிவிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மகா சங்கத்தினருக்கு ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். வடக்கு- கிழக்கிலுள்ள விகாரைகளை பாதுகாக்க முன்வர வேண்டும்.

500 மகா சங்கத்தினரை அழைத்துக் கொண்டு வடக்கு- கிழக்கிலுள்ள விகாரைகளுக்குச் செல்ல நான் தயார்.

அங்குள்ள விகாரைகளை நாம் பார்வையிட்டு தொல்பொருட்கள் தொடர்பாக தேடிப் பார்ப்போம்.

இவற்றை பாதுகாக்க நாம் தவறிவிட்டால், எதிர்காலத்தில் தர்ம யுத்தத்திற்கு முகங்கொடுக்க நேரிடும்.

பௌத்தர்கள் எழுந்தால், அவர்களை கட்டுப்படுத்த யாராலும் முடியாது. இப்போதே நாம் தாமதப்படுத்திவிட்டோம்.

அம்பிட்டிய சுமன ரத்ன தேரர், எமக்கான எச்சரிக்கையொன்றைத்தான் விடுத்துள்ளார்.

வடக்கு- கிழக்கின் பல இடங்களில் விகாரைகள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அங்கு கோயில்கள் கட்டப்பட்டு பூஜைகள் நடைபெறுகின்றன. பிரித் ஓதக்கூட அங்கு அனுமதியில்லை.

இதற்கு அரசாங்கம் ஒரு நடவடிக்கை எடுக்காவிட்டால் நாம்அரசாங்கத்திற்கு எதிராகப் அனைவரையும் ஒன்றிணைத்து போராடுவோம் என தெரிவித்தார். (5-6)

## நிலவும் சீரற்ற காலநிலையினால்
# 6,443 பேர் பாதிப்பு

(கொழும்பு)
நிலவும் சீரற்ற காலநிலையால் ஆயிரத்து 690 குடும்பங்களைச் சேர்ந்த 6443 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் தென் மாகாணத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

தென் மாகாணத்தில் ஆயிரத்து 160குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 486 பேரும் ஊவா மாகாணத்தில் 453 குடும்பங்களைச் சேர்ந்த 1674 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (நி-6)

# பேருந்து மீது மரம் வீழ்ந்ததில் 4 பேர் காயம்

(கொழும்பு)
அவிசாவளை - கொழும்பு பிரதான வீதியின் கொஸ்கம - மிரிஸ்வத்த பகுதியில் தனியார் பேருந்து ஒன்றின் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த தனியார் பேருந்து, கொழும்பில் இருந்து அவிசாவளை நோக்கி நேற்று முன்தினம் இரவு பயணித்த போது இந்த அனர்த்தம் ஏற்பட்டுளளது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனால் கொழும்பு - அவிசாவளை பிரதான வீதியின் போக்குவரத்து சில மணிநேரம் பாதிக்கப்பட்டிருந்தது. (5-6)

# பிரச்சினைக்குத் தீர்வு வழங்கினால் திரிபோஷா மீள உற்பத்தி செய்ய முடியும்



(கொழும்பு)
நாடளாவிய ரீதியில் திரிபோஷா வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பில் பாராளுமன்ற விசேட குழுவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சுகாதார அமைச்சினால் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்பட்டதன் பின்னர், திரிபோஷாவை உற்பத்தி செய்ய முடியும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது 6 மாதங்கள் முதல் 3 வயது வரையிலான குழந்தைகளுக்கு திரிபோஷா வழங்கப்படுவதில்லை என்றும் 3 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு மட்டுமே திரிபோஷா வழங்கப்படுவதாகவும் இலங்கை திரிபோஷா நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விநியோகிக்கப்படும் திரிபோஷா, போசாக்குத் தேவையுடைய பிள்ளைகளை உரிய முறையில் இனங்கண்டு, தேவையுடைய பிள்ளைகளுக்கு திரிபோஷா விநியோகிக்கப்படுவது தொடர்பில் மேற்பார்வை செய்யப்படவேண்டும் என அதிகாரிகள் தெரிவித்தனர். (5-6)

# பாதீடு குறித்து கட்சி சார்பில் ஆராயப்படும்
## சாகர



(கொழும்பு)
பாதீட்டின் முன்மொழிவுகளை பரிசீலித்த பின்னர் அதற்கு ஆதவளிப்பதா? இல்லையா என்பது தொடர்பில் கட்சி ரீதியில் தீர்மானிக்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் பத்தரமுல்லையில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி முன்வைக்கின்ற பாதீடு தொடர்பில் கட்சி சார்பில் ஆராயப்படும் ஆளும் கட்சியாக இருப்பினும் அனைத்து விடயங்களையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

நாட்டின் பொருளாதார மேம்பாடு உள்ளிட்ட சகல விடயங்களையும் கருத்திற் கொண்டு அதற்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்ற தீர்மானத்தை எடுக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார். (5-6)

# ஏழு நாடுகளுக்கான விசா அனுமதி நவம்பர் 7 முதல் அமுல்
## ஹரின் பெர்னாண்டோ

(கொழும்பு)
விசா இல்லாமால் இலங்கைக்கு வர ஏழு நாடுகளுக்கு அனுமதி நவம்பர் 7 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவரவு மற்றும் புலம்பெயர்ந்தோர் சட்டத்தில் திருத்தங்களுடன் நவம்பர் 6 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் 7 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என கூறியுள்ளார்.

இந்தியா, ரஷ்யா, சீனா, மலேசியா, ஜப்பான், இந்தோனேசியா மற்றும் தாய் லாந்து ஆகிய நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த விசா இல்லாத வருகை எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேநேரம் இலங்கை தனது சுற்றுலாத் துறையை மேலும் புத்துயிர் பெறச் செய்யும் செயற்பாட்டில் இருப்பதால், இவ்வாறான ஒருங்கிணைந்த மற்றும் மூலோபாய அணுகுமுறை சாதகமான முடிவுகளைத் தரும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (5-6)

# தேசிய மருந்துகள் ஆணையத்தின் புதிய தலைவரான ஆனந்த விஜேவிக்ரம



(கொழும்பு)
தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் புதிய தலைவராக விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பணிப்பாளர் சபை கூடியபோதே இந்த தீர்மானத்தை சுகாதார அமைச்சர் மருத்துவர் ரமேஷ் பத்திரன எடுத்திருந்தார்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தல், தரமற்ற மருந்துகளின் பயன்பாடு மற்றும் தரவு நீக்கம் தொடர்பாக NMRA மீது பல பிரிவுகள் குற்றச்சாட்டுகளை எழுப்பியிருந்தன.


இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் மருத்துவர் ரமேஷ் பத்திரனவை சுகாதார அமைச்சராகவும் சுற்றாடல் அமைச்சராக முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல நியமிக்கப்பட்டுள்ள நிலைலில் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தின் புதிய தலைவராக விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாகிஸ்தான் அபார வெற்றி

# உலகக் கிண்ணத்திலிருந்து வெளியேறியது பங்களாதேஷ்



பாகிஸ்தானுக்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

இந்தப் போட்டியில் 6ஆவது தோல்வியைத் தழுவிய பங்களாதேஷ் இரண்டாவது அணியாக முதல் சுற்றுடன் உலகக் கிண்ணத்திலிருந்து வெளியேறியது.

பங்களாதேஷினால் நிர்ணயிக்கப்பட்ட 205 ஓட்டங்கள் என்ற சுமாரான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், மீள் வருகை தந்த பக்கார் ஸமானின் அதிரடி அரைச் சதத்தின் உதவியுடன் 32.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்று மிகவும் தீர்க்கமான வெற்றியை ஈட்டியது.

இந்த வெற்றியுடன் அணிகள் நிலையில் பாகிஸ்தான் 6 புள்ளிகளுடன் 5ஆம் இடத்திற்கு முன்னேறியதுடன் ஆப்கானிஸ்தானும் இலங்கையும் 6ஆம், 7ஆம் இடங்களுக்கு பின்தள்ளப்பட்டன. அப்துல்லா ஷபிக், பக்கார் ஸமான் ஆகிய இருவரும் 127 பந்துகளில் 128 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறப்பான ஆரம்பத்தை கொடுத்தனர்.

அப்துல்லா ஷபிக் 69 பந்துகளில் 9 பவுண்டறிகள், 2 சிக்ஸ்ஸர்களுடன் 68 ஓட்டங்களைப் பெற்றார். அடுத்து களம் புகுந்த அணித் தலைவர் பாபர் அஸாம் வெறும் 9 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். (160 - 2 விக்.)

மொத்த எண்ணிக்கை 169 ஓட்டங்களாக இருந்தபோது பக்கார் ஸமான் சிக்ஸ் ஒன்றை அடிக்க முயற்சித்து பவுண்டறி எல்லையில் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார். முதல் இரண்டு போட்டிகளில் பிரகாசிக்கத் தவறியதால் அடுத்த 3 போட்டிகளில் விளையாடாமல் ஓரங்கட்டப்பட்டிருந்த பக்கார் ஸமான் 74 பந்துகளை எதிர்கொண்டு 7 சிக்ஸ்ஸர்கள், 3 பவுண்டறிகளுடன் 81 ஓட்டங்களைப் பெற்றார்.



பக்கார் ஸமான் ஆட்டம் இழந்த பின்னர் மொஹமத் ரிஸ்வான், இப்திகார் அஹ்மத் ஆகிய இருவரும் பிரிக்கப்படாத 4ஆவது விக்கெட்டில் 36 ஓட்டங்களைப் பகிர்ந்து பாகிஸ்தானின் வெற்றியை உறுதிசெய்தனர். ரிஸ்வான் 26 ஓட்டங்களுடனும் இப்திகார் அஹ்மத் 17 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காதிருந்தனர்.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த பங்களாதேஷ் 45.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 204 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. பங்களாதேஷ் முதல் 6 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்ததுடன் 23 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்தது.

இந் நிலையில் 4ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த லிட்டன் தாஸ், மஹ்முதுல்லா ஆகிய இருவரும் 79 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு உற்சாகத்தைக் கொடுத்தனர். லிட்டன் தாஸ் 45 ஓட்டங்களையும் மஹ்முதுல்லா 56 ஓட்டங்களையும் பெற்று 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆட்டம் இழந்தனர். (130 - 5 விக்.)

மத்திய வரிசையில் அணித் தலைவர் ஷக்கிப் அல் ஹசன், மெஹ்மதி ஹசன் மிராஸ் ஆகிய இருவரும் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி 7ஆவது விக்கெட்டில் 45 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். ஷக்கிப் அல் ஹசன் 43 ஓட்டங்களைப் பெற்றதுடன் மெஹ்தி ஹசன் மிராஸ் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஷஹீன் ஷா அப்ரிடி 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் மொஹமத் வசிம் 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ஹரிஸ் ரவூப் 36 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகன் பக்கார் ஸமான் தெரிவானார். (ம-7)

## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 6 | 6 | 0 | 12 |
| 2 | தென்னாபிரிக்கா | 6 | 5 | 1 | 10 |
| 3 | நியூசிலாந்து | 6 | 4 | 2 | 8 |
| 4 | அவுஸ்திரேலியா | 6 | 4 | 2 | 8 |
| 5 | பாகிஸ்தான் | 7 | 3 | 4 | 6 |
| 6 | ஆப்கானிஸ்தான் | 6 | 3 | 3 | 6 |
| 7 | இலங்கை | 6 | 2 | 4 | 4 |
| 8 | நெதர்லாந்து | 6 | 2 | 4 | 4 |
| 9 | பங்களாதேஷ் | 7 | 1 | 6 | 2 |
| 10 | இங்கிலாந்து | 6 | 1 | 5 | 2 |

# பலோன் டி ஓர் விருது

## 8 ஆவது முறையாக மெஸ்சிக்கு



கால்பந்து உலகின் மிக உயரிய விருதான பலோன் டி ஓர் விருதை சிறந்த வீரர் மற்றும் வீராங்கனைக்கு வருடந்தோறும் பிபா வழங்கி வருகிறது. 1956 ம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான பரிந்துரைக்கப்பட்ட வீரர்கள் பட்டியலில் 60 (30 ஆண் மற்றும் 30 பெண்) பேர் இடம் பெற்றிருந்தனர்.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான பலோன் டி ஓர் விருதை அர்ஜென்டினா வீரர் லியோனல் மெஸ்சி 8-வது முறையாக வென்று சாதனை படைத்துள்ளார். (ம-7)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண மரநடுகை மாதம்

## கார்த்திகை 01 - 30, 2023




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(17626)

# கல்விச் செயற்பாடுகளில் இருந்து இடைவிலகும் மாணவர்கள் அதிகரிப்பு

## வடமாகாண ஆளுநர் சார்ள்ஸ்

(யாழ்ப்பாணம்)

**வடக்கில் பாடசாலை மாணவர்கள் கல்வியில் இருந்து இடைவிலகும் மாணவர்கள் அதிகரித்து உள்ளதாகவும் தாங்களாகவே வாசிக்கும், எழுதும் திறன் ஆரம்பக்கல்வி மாணவர்கள் இடையில் குறை வடைந்து வருவதாகவும் வடமாகாண ஆளு நர் பி.எம்.எஸ் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**


அரசாங்கம் கல்விக்காக பெருமளவான நிதியை செலவழித்து வருகிறது. இளம் வயதினர் கல்வியில் சிறந்து விளங்கினால் தான் நாடு முன்னோக்கி செல்லும்.

வடமாகாணத்தை பொறுத்தவரையில் கல்வியில் பின்னோக்கி செல்வது வேதனையான விடயமாகும்.

வடக்கில் தற்போது பாடசாலையில் இருந்து மாணவர்கள் இடைவிலகல் அதிகரித்து செல்கிறது.

அதேவேளை சுயமாக வாசிக்கும், எழுதும் திறன் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் மத்தியில் குறைவடைந்து செல்கிறது. இது ஒரு ஆபத்தான விடயமாகும் எனத்தெரிவித்தார். (5-6-33)

# கொடிகாமத்தில் தடம்புரண்டு விபத்துக்குள்ளான பேருந்து



(சாவகச்சேரி)

கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் முள்ளிப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை தனியார் பேருந்து ஒன்று கட்டுப்பாட்டினை இழந்து தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் சேவை பேருந்தே இவ்வாறு தடம் புரண்டுள்ளது.

இதன்போது இரண்டு பயணிகள் மாத்திரம் சிறு காயங்களுக்கு இலக்காகியிருப்பதாகவும் ஏனைய பயணிகள் தெய்வாதீனமாக தப்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (5-6-33)

# திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது



(கரணவாய்)

தொடர்ச்சியாக தண்ணீர் மோட்டார்கள் களவு போன சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் திருடப்பட்ட ஐந்து மோட்டார்களும் மீட்கப்பட்டுள்ளன.

நெல்லியடிப் பகுதியில் தொடர்ச்சியாக தண்ணீர் மோட்டர்கள் களவு போன நிலையில் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸாரிடம் மக்கள் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து பொலிஸார் நடத்திய விசாரணையில் குடவத்தை பகுதியில் தேடுதல் நடத்திய வேளை குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கபட்டது. இந்நிலையில் சந்தேக நபரை விசாரணைகளின் பின்னர் பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (5-6-60-33-104)

# சட்டவிரோத மணல் அகழ்வினை தடுக்க பொலிஸாருடன் இராணுவமும் களம் இறக்கப்படுவார்கள்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்கு பொலிஸாருக்குத் துணையாக இராணுவமும் விசேட அதிரடிப் படையினரும் களத்தில் இறங்குவார்கள் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில், நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மாக மணல் அகழ்வு இடம்பெற்று வருவதால் அது பல பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

தற்போது சட்டவிரோத மணல் அகழ்வை பொலிஸார் கட்டுப்படுத்தி வருகின்றனர். தேவை ஏற்படின் அவர்களுக்கு துணையாக இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரையும் களம் இறக்கப்படுவார்கள் என தெரிவித்துள்ளார். (5-6-33)

# கூட்டுறவு தின விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து) நடத்தும் 101 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று புதன்கிழமை மு.ப 10.30 மணியளவில் சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் செல்வராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

முதன்மை விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் வாகீசன் மற்றும் வடமாகண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி பா.அபிராமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (5-6)

# இராசிபலன்

01.11.2023
ஐப்பசி 15, புதன்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 12.03 மணிவரை
ரோகினி முற்பகல் 6.52 மணிவரை

சுபநேரம் 04.33-06.03 மணிவரை
இராகுகாலம் 12.03-01.33 மணிவரை

சந்திராஷ்டமம் -விசாகம்.
சங்கடஹர சதுர்த்தி விரதம்.

வளவன்




எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு.




பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வார்கள், குடும்ப பொறுப்புக்கள் கூடும், கற்பனை மிகுதியான நாள்.




வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள், உடல்நலனில் கவனம் தேவை.




அரசு வழியில் அனுகூலமுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் பெருகி வளம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.




உற்சாகத்தோடு பணி புரிந்து பலரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொள்வீர்கள், வெளியூர்த்தொடர்புகள் விருத்தியாகும், முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.




எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், தேடிச்சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள்.




பொதுவாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது நிதானம் தேவை.




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் சந்திப்பால் உற்சாகம் பெருகும் நாள், காரிய அனுகூலமுண்டு.




இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாகச் செயற்படுவர்.




உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.




உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும் எண்ணங்கள் எளிதில் நிறைவேறலாம்.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வீட்டுத் தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவர்.

கனவுகள் நனவாக வேண்டுமானால் முதலில் தூக்கத்திலிருந்து விழிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சர்வதேச ஐக்கிய கலாம் நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்வு, இந்தியாவில் ஜே.பி.ஹோட்டல், கோயம்பேடு, சென்னையில் 15.10.2023 அன்று நிகழ்ந்த வேளை யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க அழைக்கப்பட்டு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையை நாமும் பாராட்டுவதோடு அவரது சமூகசேவை மென்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்
சிவகணேசன் புடவையகம்,
இல.41, பெரியகடை, யாழ்ப்பாணம் (17622)


# இலங்கை அடுத்த ஆண்டு படுகுழிக்குள் தள்ளப்படும்

## பாட்டலி சம்பிக்க



(கொழும்பு)

கடனை மீளச் செலுத்துவது தொடர்பான இணக்கப்பாட்டை ஏற்படுத்துதல் மற்றும் கடனை மீளச் செலுத்துதல் ஆகிய இரு விடயங்களில் எதனை தேர்ந்தெடுத்தாலும் இந்த நாடு அடுத்த வருடம் இருள் நிறைந்த படுகுழியில் தள்ளப்படும் என்பது நிச்சயம் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலிசம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கடன் தொடர்பில் அரசாங்கம் ஒரு இணக்கப்பாட்டையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. சீனாவுடன் இணக்கம் பெற்றுக் கொண்டுள்ளதாக அரசாங்கம் கூறினாலும் இதுவரையில் அவ்வாறு எந்த இணக்கமும் கிடைக்கவில்லை.

ஒருவேளை அந்த இணக்கப்பாட்டை பெற்றுக்கொண்டால் பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்த நேரிடும். அதற்கமைய, தற்போது எமக்கு இருக்கும் வரையறுக்கப்பட்ட இருப்பை தொடர்ந்து இழக்க நேரிடும்.

மறுபுறம் கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியாவிட்டால் செம்பியா, கானா ஆகிய நாடுகளைப் போன்று அடுத்த வருடம் இருள் நிறைந்த படுகுழியில் தள்ளப்படுவோம். அதே போன்று, லெபனான், கிறீஸ் போன்ற நாடுகளின் பாதையில் பயணிக்க நேரிடும்.

கடன் மீளச் செலுத்துவது தொடர்பில் ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வராவிட்டாலும் நெருக்கடியை சந்திக்க நேரிடும்.

இந்த பாராதூர நிலைமை தொடர்பில் சிந்திக்காமல், உலக வங்கியும் எமக்கு நிவாரணங்களை வழங்குவதாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கி, அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் எமக்கு உதவிக் கரங்களை வழங்கி வருவதாகவும் கூறி கொண்டு முன்னோக்கி சென்று கொண்டிருக்கிறோம் என தெரிவித்தார். (5-6)


# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல் வலிகாமம் வடக்கு பிரதேசசபை- உபஅலுவலகம் மயிலிட்டி

விண்ணப்பதாரர்: கந்தவனம் இராமநாதனும் மனைவி கமலாதேவியும்.
முகவரி: முனியப்பர் கோவிலடி கட்டுவன்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உபஅலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம் 16, முனியப்பர் கோவில் வீதியில் அமைந்துள்ளது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு சொக்கலிங்கம் சண்முகலிங்கம் முகதாவில் 4438 ஆம் இலக்கத்தில் 02.02.2013 ஆம் திகதியில் முடிந்த அறுதி உறுதிப்படி வேலுப்பிள்ளை கனகசபை மகள் இந்திராதேவி என்பவரால் கந்தவனம் இராமநாதனும் மனைவி கமலாதேவிக்கு உறுதி எழுதப்பட்டது. குறித்த உறுதியின் தாய் உறுதி 30.06.2012 ஆம் திகதி 4285 ஆம் இலக்கம் இதை அத்தாட்சிப்படுத்தும் நொத்தாரிஸ் மூலம் பிரகடனப்படுத்தல் உறுதி மூலம் வேலுப்பிள்ளை கனகசபை மகள் இந்திராதேவியினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை தெல்லிப்பழை கோவிற்பற்றும் கட்டுவன் இறை "மதியன்" நிலப்பரப்பு: 13 **3/8**. இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஏ.மகேந்திரன் அவர்களின் வரைபட இலக்கம் 1003^A வரைபடத்தின்படி துண்டு 02 ஆகக் காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு - கந்தவனம் இராமநாதனும் மனைவி கமலாதேவிக்குரிய ஆதனம்.

வடக்கு - முழு ஆதனத்தில் இருந்து விடப்பட்டு முழு ஆதனத்தின் வடக்கெல்லையோரமாக புதிதாக அமைக்கப்பட்ட பன்னிரெண்டு அடி அகலப்பாதை.

மேற்கு -மிகுதி ஆதனம்.

தெற்கு- சிவராஜா சிவசுப்பிரமணியத்துக்குரிய ஆதனம்.

மேற்குறித்த ஆதனத்தை கந்தவனம் இராமநாதனும் மனைவி கமலாதேவியும் எனும் பெயரில் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்,**
**செயலாளர்.**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**
(17615) 01.11.2023



# அரசாங்க அறிவித்தல் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024

மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் சார்பில் யாழ்.மாவட்டச் செயலக திணைக்களப் பெறுகைக்குழுவினால் யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2024 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வதற்கும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் வடபிராந்தியத்திலுள்ள நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை மாவட்டச் செயலக பெறுகை அலகு (அறை இல:42) மற்றும் பிரதேச செயலகங்களில் **2023.11.01** ஆம் திகதி தொடக்கம் **2023.11.30** ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் அல்லது **www.jaffna.dist.gov.lK** என்ற இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை **2023.11.30** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"நிர்மாண தாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024"** எனக் குறிப்பிட்டு **"அரசாங்க அதிபர், பெறுகை அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாகப் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் பெறுகை அலகில் (அறை இல.42) சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விருப்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கமையவும், ஏனைய வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்கு **ரூபா 500/=** இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள **7041946** எனும் இலங்கை வங்கி கணக்கிலக்கத்திற்கு வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக் கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டையை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்களும் **2023.11.30** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| ஒப்பந்தத் தொகை | பதிவுக் கட்டணம் |
|---|---|
| ரூபா 2,000,000க்கு சமமான அல்லது அதற்குக் குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 2,000 |
| ரூபா 2,000,000க்கு அதிகமானதும் ரூபா 5,000,000க்கு சமமான அல்லது அதற்குக் குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 3,000 |
| ரூபா 5,000, 000க்கும் அதிகமானதும் ரூபா 10,000,000 க்கு சமமான அல்லது அதற்குக் குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 5,000 |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**
(சி-7531)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# இஸ்ரேலியப் படைமீது ஏவுகணைத் தாக்குதல்

(காசா)

காசாவில் முன்னோக்கி நகரமுயலும் இஸ்ரேலிய படையினர் மீது டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள்இயந்திரத் துப்பாக்கிகளை பயன்படுத்தி தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

காசாவின் தென்பகுதிக்குள் ஊடுருவ முயலும் இஸ்ரேலிய படையினர் மீது இயந்திரதுப்பாக்கிளை பயன்படுத்தி தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக ஹமாஸின் ஆயுதப்பிரிவு தெரிவித்துள்ளது.

அல்யாசின் 105 ஏவுகணைகளை பயன்படுத்தி தாக்குதலை மேற்கொண்டதாகவும் அறிவித்துள்ளது. அல்யாசின் என்பது காசாவில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகள் ஆகும்.

காசாவின் வடமேற்கு பகுதியில் இஸ்ரேலின் புல்டோசர்களையும் டாங்கிகளையும் ஏவுகணைகளையும் பயன்படுத்தி இலக்குவைத்ததாகவும் ஹமாஸ் தெரிவித்துள்ளது.

அதேவேளை இதனை உறுதிசெய்ய முடியவில்லை என ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளதுடன் இஸ்ரேல் இது குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை. (5-6)



# போர் நிறுத்தத்திற்கு இ...

## பிரதமர் ...



(ஜெருசலேம்) —

காசாவில் போர் ...

இது போருக்கான...

ஹமாஸிடம் இஸ்...

பிரதமர் பெஞ்சமின்...

ஒக்டோபர் 7 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்களுக்குப் பிறகு ஹமாஸுடனான பகையை நிறுத்துவதற்கு இஸ்ரேல் உடன்படாது என நெதன்யாகு வெளிநாட்டு பத்திரிகைகளுக்கு ஆங்கில மொழி மாநாட்டின் போது நேற்று முன்தினம் தெரிவித்தார்.

"ஹமாஸிடம் சரணடைய வேண்டும், என்று இஸ்ரேலுக்கு அழைப்பு விடுப்பது போர் நிறுத்தத்திற்கான அழைப்புகள். ஆனால் அது நடக்காது" என்றும் ஹமாஸால் பிடிக்கப்பட்ட பணயக் கைதிகளை "நிபந்தனையின்றி" விடுவிக்க சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும் என்றும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார்.

இஸ்ரேல் "இந்தப்போரைத் தொடங்கவில்லை". ஆனால் இந்தப் போரில் கண்டிப்பாக நாம் வெற்றி பெறுவோம்.

வெற்றி வரும் வரை இஸ்ரேலின் காட்டுமிராண்டித்தனத்தின் சக்திகளுக்கு எதிராக நிற்கும். சமாதானத்திற்கு ஒரு காலம் உண்டு, போருக்கு ஒரு காலம் உண்டு என்று பைபிள் சொல்கிறது. இது போரிற்கான நேரம் என்று அவர் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை காசாவில் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்து ஐ.நாஅமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-6)



# பகிரங்க மன்னிப்பு கேட்ட இஸ்ரேலிய பிரதமர்



(ஜெருசலேம்)

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நாட்டு மக்களிடம் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போர் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில், கடந்த 7 ஆம் திகதி நடந்த ஹமாஸ் தாக்குதல் குறித்து இஸ்ரேல் இராணுவம் மற்றும் உளவு அமைப்புகள் எந்தவொரு முன்னெச்சரிக்கையும் வழங்கவில்லை என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சமூக வலைத்தளத்தில் குற்றம்சாட்டி இருந்தார்.

இஸ்ரேல் நாட்டிற்காக உயிரை பணயம்வைத்து சண்டை போட்டு வரும் இராணுவத்தினர் குறித்து எதிர்மறையாக பிரதமர் நெதன்யாகு கருத்து தெரிவித்து விட்டதாக பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அத்துடன் பிரதமர் நெதன் யாகுவின் கூட்டணி மற்றும் எதிர்க்கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகளும் இதற்கு வலுவான கண்டனங்களை தெரிவித்தனர்.

இந்நிலையில் சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவிற்கு பிரதமர் நெதன்யாகு வருத்தம் தெரிவித்து இருப்பதுடன், அந்த பதிவையும் நீக்கியுள்ளார்.

மேலும் மன்னிப்பு கேட்டு வெளியிட்டுள்ள பதிவில், நான் தவறு செய்து விட்டேன், நான் வெளியிட்ட கருத்துக்காக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்.

நமது நாட்டின் இராணுவத்திற்கு எப்போதும் முழு ஆதரவு வழங்குவேன் என தெரிவித்துள்ளார். (5-6)

# லெபனான் வாழும் கனேடியர்க... எச்சரிக்கை விடுத்த மெலனி ...



(பெய்ரூட்)

லெபனாவில் வாழ்ந்து வரும் கனேடியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதனை இறுதி நேரம் வரையில் காலம் தாழ்த்த வேண்டாம் என கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் க... திய வ... பதற்ற நி... கின்றது.

இஸ்ே... லெபானி... போராளி... தல் நடத்...

இவ்... யில் இ... யில் க... திரும்ப ... தாகலாம்... பட்டுள்ள...

லெபன... த்தக வி... வெளியே... தர்ப்பம் ... தெரிவித்...


# சீனாவில் உலகின் முதல் பயண...

(பீஜிங்)

சீனாவில் உலகின் முதல் பயணிகள் விமான டாக்ஸிக்கு சீன அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இரண்டு பேர் பயணிக்கக் கூடிய இந்த ஏர் டாக்ஸி சீன அரசிடமிருந்து பாதுகாப்பு தரச்சான்றிதழைப் பெற்றுள்ளது. EH216-S AAV எனும் இந்த ஏர் டாக்ஸியை எஹாங் என்ற சீன நிறுவனம் தயாரித்துள்ளது.

விரைவில் ஏர் டாக்ஸி சேவையை தொடங்க முயற்சித்து வருவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. அடுத்த ஐந்து ஆண்டுகளில், உலகின் பல இடங்களில் ஏர் டாக்ஸிகள் தோன்றும் என்று நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஹுவாஜி ஹு தெரிவித்துள்ளார். (5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...இஸ்ரேல் உடன்படாது

## ...ர் நெதன்யாகு திட்டவட்டம்

...ம்)

...போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் உடன்படாது என்றும், ...க்கான நேரம் என்றும் போர் நிறுத்தம் என்பது ... இஸ்ரேல் சரணடைவதற்கு சமனானது என இஸ்ரேல் ...ந்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.



...ஸ் ...ன ...ாக ...ஒரு ...ஒரு ...ில் ...ன ...ர். ...சா ...ழ ...தீர் ...மை (5-6)

# மெக்சிக்கோவில் சூறாவளி 48 பேர் உயிரிழப்பு




(மெக்சிக்கோ)

மெக்சிகோவைத் தாக்கிய 'ஓடிஸ்' சூறாவளியால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஏற்பட்ட ஓடிஸ் சூறாவளியினால் மெக்சிக்கோவின் அகா புல்கோ பகுதியானது கடு மையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இச்சூறாவளியினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்திருப்பதாகவும் சுமார் 36 பேரை காணவில்லை என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

அத்தோடு சுமார் 273,000 வீடுகள், 600 உணவகங்கள் மற்றும் 120 மருத்துவமனைகள் சேதமடைந்துள்ளன என்றும், பல வணிக வளாகங்கள் இடிந்துள்ளன எனறும் அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (5-6)

# ...யர்களுக்கு ...னி ஜோலி

போர் காரணமாக பிராந்திய வலயத்தில் பெரும் பதற்ற நிலை நிலவி வருகின்றது.

இஸ்ரேலிய படையினர் லெபானின் ஹிஸ்புல்லாஹ் போராளிகள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் இறுதி நேரம் வரையில் காத்திருந்து நாடு திரும்ப எத்தனிப்பது ஆபத்தாகலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

லெபனானிலிருந்து வர்த்தக விமானங்களின் ஊடாக வெளியேற இன்னமும் சந்தர்ப்பம் உண்டு என அவர் தெரிவித்துள்ளார். (5-6)

# காசாவுக்குள் பொருட்கள் கொண்டு செல்ல இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும்

## ஐ.நா வலியுறுத்தல்

(காசா)

காசாவுக்குள் நிவாரணப் பொருட்களைக் கொண்டு செல்ல இஸ்ரேல் அதன் எல்லையைத் திறந்துவிடுமாறு ஐக்கிய நாட்டு நிறுவனம் நேற்று முன்தினம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஒரு வாரமாக எகிப்து - காசா இடையே உள்ள ராஃபா எல்லை வழியே மனிதாபிமான உதவிப்பொருட்கள் காசாவுக்குள் கொண்டு செல்லப்பட்டன.

காசாவின் மொத்த மக்கள் தொகை சுமார் 2.3 மில்லியன். அவர்களில் 1 மில்லியனுக்கும் அதிகமானோர் இஸ்ரேல் நடத்திய தரைத் தாக்குதலில் வீடுகளை இழந்துள்ளனர்.




அவர்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ராஃபா எல்லை வழியே மட்டுமே நிவாரணப் பொருள்களைக் கொண்டுசெல்வது போதுமானதல்ல என்றும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள கிரம் ஷலோம் வழியாக மட்டுமே போதுமான அளவு கனரக வாகனங்கள் செல்லலாம் என்றும் ஐக்கிய நாட்டு நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (5-6)

# ...பயணிகள் விமான டாக்ஸி



# இஸ்ரேலியப் படைகளால் 60 பாலஸ்தீனர்கள் கைது

(ஜெருசலேம்)

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலியப் படைகளால் பாலஸ்தீனர்கள் 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கைதிகள் விவகார ஆணைக்குழு மற்றும் பாலஸ்தீன கைதிகள் சங்கம் தெரிவித்துள்ளன.

ஹேஹ், ஹெப்ரோன், நப்லஸ் ஆகிய இடங்களில் கைது செய்யப்பட்டதாகவும் சிலர் ஜெனின், துல்கர்ம், ரமல்லா மற்றும் ஜெருசலேம் ஆகிய இடங்களில் கைது செய்யப்பட்டதாகவும் தாக்குதல் நடத்தியமை, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கைதிகள் விவகார ஆணைக்குழு மற்றும் பாலஸ்தீனிய கைதிகள் சங்கம் தெரிவித்துள்ளன.

ஹமாஸ் கடந்த 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்ததில் இருந்து ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் 1,740 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழித்தவை யாவும் கழிவுகளல்ல: மீள்சுழற்சியில் இடுபொருளுமாகும்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

எமக்கிருக்கும் தொழில்நுட்பங்களின் வசதியைப் பெருக்கினால் கழிவுகளென்று நாம் கழித்துவிடும் ஒவ்வொன்றையும் இடுபொருளாக்கி மீளப் பயன்படுத்திக் கொள்ளலாம். கழிவு முகாமைத்துவமும் இலகுவில் நடைமுறையாகும். நமது வாழ்க்கையில் ஒவ்வொரு செயற்பாட்டிலும் எமக்குத் தேவையானது போக மீதியனைத்தும் கழிவுகளாக எமக்குப் பயன்தராது என எண்ணுவதன் காரணமாக கழிவாக அவை தேங்கி அவற்றை முகாமைத்துவப்படுத்துவதற்கு அதிகளவில் செலவு செய்ய வைத்திருக்கின்றன. எமது அறியாமையின் காரணமாக கழிவுகளாக நாம் ஒதுக்கிவிடுபவை இறுதியில் எமக்கு தலையிடியைத் தருகின்ற விடயமாக மாறிவிடுகின்றன. இதற்காகப் பெருமளவிலான நிதிவிரயமாக்கப்படுகின்ற அதேவேளையில் எமது விவசாய, மற்றும் விவசாயஞ்சார் தொழில்துறைக்கான இடுபொருட்களாக மாற்றப்படக்கூடியதாக இருப்பதனை கவனிப்பதில்லை.

மக்களின் மனதில் குப்பை யாக எதனையும் வீணாக்காமல் அதனை நாம் மீளப் பயன்படுத்த வழியுண்டானால் அதற்கான பக்குவம் தானாக ஏற்பட்டுவிடும். தொடர்ந்து பயன்படுத்த முடியாது விட்டால் அதனை கழிவாக அகற்றாமல் அதனை இன்னொரு தொழில் வாண்மைக்கான இடுபொருளாக்கும் வழிவகைகளை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். எளிய தொழில்நுட்பங்களின் அவசியம் இங்கே உணரப்படுகின்றன. தென்னந்தும்பு பிரித்தெடுத்த பின் உருவாகும் சோத்தி கழிவாக அல்லாமல் அதனை உக்கவைத்து சிறந்த நீருறுஞ்சியாக நல்ல பசளையாக வீட்டுத்தோட்டத்தில் இன்னும் வயல்களில் பயன்படுத்தலாம்.

கழிவாக நாம் ஒதுக்கும் பலவற்றில் மழை பெய்த கையோடு நீர் தேங்கத் தொடங்கியவுடனேயே நுளம்பு முட்டையிட ஆரம்பித்து அந்த நீர் காய்ந்து போவதற்கிடையில் முட்டை பொரித்து குடம்பி கூட்டுப் புழுவாகி பின் நிறைவுடலி வெளியேறிவிடும். இந்த நாட்கணக்கை போட்டுப் பாருங்கள். விந்தையிலும் விந்தையிது. கழிவென குப்பையில் வீசப்பட்ட பொலித்தீனிலிருந்து ஒரு நாள் கப் (one day cup) பயன்படுத்திய கொள்கலன்கள், சிரட்டை, பாதிவெட்டிய தென்னம் கோம்பையில் நீர் தேங்கி நுளம்பினைப் பெருக்கி விடுகின்றது. பொறுப்புள்ள சமூகமாக இவற்றை அழித்துவிட்டால் அல்லது எரித்து விட்டால் நாமாக நுளம்பைக் கட்டுப்படுத்து உதவியவர்களாவோம்.

வருடந்தோறும் ஏறக்குறைய 70-75 சதவீதமான சேதனக் கழிவுகள் உருவாவதாக கணிப்பீடு கூறுகின்றது. பெரியதொழில் நிறுவனங்களிலிருந்து சந்தை மற்றும் வீட்டுக்கழிவுகள் உள்ளடங்கலாக சேதனக்கழிவுகளின் பெருக்கம் அதிகரித்து வருகின்றது. ஆனால் இவ்வாறாக தேங்கும் கழிவுகளை முறையாக முகாமைத்துவப்படுத்தாது ஆங்காங்கே தெருவோரங்களில், கவனிக்காத காணிகளில் இன்னும் பொதுஇடங்களில் இலாவகமாக வந்து எறிந்து விட்டு போகின்றனர்.

அண்மைய தகவலின்படி இலங்கையில் வருடத்திற்கு 8000-15,000 மெற்றிக் தொன் கழிவுகளும் நாளொன்றுக்கு 12400 மெற்றிக் தொன் கழிவுகளும் உருவாவதாகவும் இவற்றில் 8000 மெற்றிக் தொன் சேதனக் கழிவுகளாகவும் மேலும் அண்ணளவாக ஒரு மனிதன் நாளொன்றுக்கு 620 கிராம் கழிவினை உற்பத்தி செய்வதாகவும் கூறப்பட்டுள்ளது. இக்கழிவுகளை

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



முறையாக மீள்சுழற்சி செய்யும் பொறிமுறைக்குட்படுத்தினால் எமது நாட்டிலேயே உள்ள தொழிற்சாலைகளுக்கான இடுபொருளாக மாற்றிவிடலாம். ஆனால் அவை பாவனையற்ற பகுதிகளில் கொட்டப்பட்டு மழை பெய்யும் போது மிதந்து வயல் நிலங்களிலும் பாதைகளிலும் படிந்து விடுகின்றன.

அசேதனக் கழிவுகளான பயன்படுத்திய பசளை மற்றும் பீடைநாசினிகளின் மீதிகள், அகத்துறுஞ்சப்பட்டவை போக ஏனையவை கழிவாக ஆனால் நிலத்தில் நிலத்தடி நீரில் செறிந்து விடுகின்றன. நாம் அன்றாடம் பயன்படுத்தும் வேதியியல் திரவங்கள் மற்றும் பொருட்கள் பொலித்தீன் உட்பட மண்ணில் உக்கலடையாமல் தேங்குவதால் உயிரினங்களுக்கு பாதகமானவையாகி விடுகின்றன. உக்கலடையாத பிளாஸ்ரிக் பொருட்கள், கண்ணாடிகள், பீங்கான்கள், இரும்பு பொருட்கள் என அனைத்தும் கழிவாக எறியப்படும் போது சூழலுக்கு மாசாகி விடுகின்றன. ஆனால் தற்போது வாகனங்களில் வந்து இக்கழிவுகள் அனைத்தையும் வாங்கிசெல்லும் தன்மை நகர்ப்புறங்களில் இருக்கின்றது. இது நல்ல முயற்சி. இக்கழிவுகளை உருக்கி வேறு பொருட்களாக மாற்றுவதற்கான இடுபொருட்களாக பயன்படுகின்றன.

மனையில் உருவாகும் கழிவுகளுள் சேதனக்கழிவுகளே ஏறக்குறைய 80 சதவீதமிருக்கும். சமையலறைக் கழிவுகள் உட்பட தாவர மற்றும் விலங்குக் கழிவுகளை மீள் சுழற்சி செய்வதில் மண்புழு (Earth worm) மற்றும் 'கறுப்புசிப்பாய் (Black soldier fly) என்பனவற்றை இலகுவாக பயன்படுத்தலாம். மண்புழுவினை பயன்படுத்துவதன் மூலம் மண்புழு உரம், மண்புழு திரவம் மற்றும் மண்புழு தேநீர் என்பனவற்றை பெறமுடியும். சேதனக்கழிவு களை இடுபொருளாக்கி மனைகளிலேயே சேதன உரத்தை உற்பத்தி செய்யும் தன்மையைப் பாரீர். கறுப்புசிப்பாய் ஈயினை பயன்படுத்துவதால் அதனது புழுக்களை வளர்த்து கோழித்தீவனமாக பயன்படுத்திக் கொள்ளலாம். குறிப்பாக கொல்லைப புற கோழி வளர்ப்பில் (Backyard Poultry) இப்புழுக்களை இலகுவில் தீவனமாக்கிவிடலாம். இளம் புழுக்களை காயவைத்து பவுடராக்கி விலை மலிவான தானியங்களுடன் கலந்து கோழித் தீவன உற்பத்தியை கிராமப்புறங்களில் வருமான மீட்டும் மனைத் தொழிலாக்கலாம். குறிப்பாக பெண்களைத் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள் மற்றும் பெண்களுக்கான இதிகம் சிரத்தையில்லாத பொழுதுபோக்கான தொழிலாக இலகுவில் செய்து குடும்ப வருமானத்தை பெருக்கிக் கொள்ள முடியும்.

பப்பாசி மரமும் சிறந்த எரிபொருளாகும். பப்பாசி மரம் காய்த்து முடிந்து காய்ந்த பின் சேகரித்து துண்டுகளாக்கி சேகரித்து வைத்தால் அடுப்பு பயன்படுத்தி சமையல் செய்பவர்களுக்கு பொச்சு மட்டைத்தும்பு மற்றும் கடதாசிக்குப் பதிலாக அடுப்பு மூட்டுவதற்கான சிறந்த பொருளாகி விடும். கரி அடுப்பில் (சிரட்டை, ஊமல், ஆண் பனைப் பாளை, விறகுகரி) இன்னும் சமைப்பவர்கள் சிறிய காய்ந்த குச்சிகளுடன் காய்ந்த பப்பாசி மரத் தும்புகளை பயன்படுத்தி அதனை பற்றவைப்பதற்கு மிகவும் எளிதாக பயன்படுத்தி விடலாம். வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.

எமது பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகளில் உருவாகும் கழிவுகளை உக்கவைத்து சிறந்த சேதனப்பசளைகளை உருவாக்க முடியும். சேதனக் கழிவுகளை உணவாக்கும் மேற்கூறிய மண்புழு மற்றும் கறுப்புசிப்பாய் ஈ, தவிர்ந்து காளான், ரைக்கோடேர்மா என்னும் நன்மைதரும் பூஞ்சணங்களை வளர்த்திட முடியும். சேதனக்கழிவுகள் உக்கினால் சேதன உரமாகிவிடும். வீட்டுத்தோட்டத்திற்குள்ளேயே அவற்றை மீள் சுழற்சி செய்திடலாம்.

மேற்கூறிய அனைத்தையும் தவிர்த்து இப்போது இலத்திரனியல் கழிவுகள் மனைகளில் தேங்கத் தொடங்கிவிட்டன. பழுதடைந்த பயன்படுத்த முடியாத கைப்பேசிகள், கணனிகள், காற்றாடி, மின்னியல் சாதனங்கள், பயன்படுத்திய பல்ப்புகள், அது இது என பலவகையான பொருட்கள். இவற்றை என்ன செய்வது என தெரியாமல் மனைகளில் தேங்குகின்றன. கழிவுப்பொருட்களை சேகரிக்கும் நபர்களுக்கு இவற்றை மிக குறைந்த விலையென்றாலும் விற்றுவிடுவது நல்லது. இடமாவது மிஞ்சும். சுவாரஸ்யமான சம்பவமாக ஜப்பானில் குடும்பங்கள் ஒவ்வொரு வருடமும் இடத்தை மாற்றிக் கொள்வதும் மனைகளில் இருக்கும் கழிவுகளை மனைகளிலிருந்து அப்புறப்படுத்துவதனை சிறந்த செயற்பாடாக செய்கின்றனர். எமக்கு பயன்படாத கழிவு இன்னொருவரின் தேவையைப் பூர்த்தி செய்யுமாதலால் கழிவென்று நினைத்தவற்றை மீள் சுழற்சிக்கு அனுப்பிவிடலாம். இதற்காக மீள்சுழற்சி மையங்களை உருவாக்கலாம். அதனையும் பழைய இரும்பு வியாபாரம் போல வருமான மீட்டும் தொழிலாக்கிவிடலாம்.

நாம் இறந்தபின் எமது உடல் கழிவாகிவிடும். நீண்டநாளி வைத்திருக்க முடியாது. சைவர்கள் மரபில் அந்த உடலை மரத்துடன் சேர்த்து சுடலையில் எரித்து அந்த இடத்தில் புருவமமைத்து சிறு குச்சியால் ஏர் செய்து உழுது நவதானியங்களை விதைத்து பின் நீர் தெளித்து காடாத்தினை செய்து முடிப்போம். நவதானியங்கள் முளைத்து பயிராகி மக்களுக்கு உணவாகும் என்னும் நினைப்பில் நமது உடல் சாம்பரான பின் உரமாகி வளமாகும் விந்தை பாரீர்.

கழிவுகளை மீள்சுழற்சி செய்து அவற்றை இடுபொருளாக்கினால் அவற்றை முகாமைப்படுத்துவதில் வெற்றியும் குடும்ப கிராம நகர சுகாதாரத்தினை மேம்படுத்தவும் முடியும். கிராமப்புற, நகர்ப்புற மக்களை கொண்டசங்கங்கள், ஒன்றியங்கள் இன்னும் அரசாங்க அரசுசாரா சபைகள் இது விடயத்தில் கரிசனை செலுத்தலாம். நமது பிரதேசமும் நாம் வாழும் வீடும் சுத்தமாகும். முயன்றால் எதுவும் முடியும் - வாரீர் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகரசபை
# வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்களை விநியோகிக்க, சேவைகளை வழங்க ஆர்வமுள்ள அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், உள்ளூர் முகவர்கள், வழங்குநர்களிடமிருந்து 'வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள்' கோரப்படுகின்றன. இதற்கான படிவங்களை நேரடியாக யாழ் மாநகரசபையின் கொள்வனவுப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

| குறி.இல. | பொருட்கள் | குறி. இல | சேவைகள் |
|---|---|---|---|
| G1 | காகிதாதிகள், எழுதுபொருட்கள். | S1 | அனைத்து அச்சிடுதல் நடவடிக்கைகள். |
| G2 | அலுவலகத் தளபாடங்கள்(இரும்புருக்கு, மரம், பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ்) | S2 | விளம்பரப்பலகைகள் அமைத்தல். |
| G3 | மேல்நாட்டு மருந்து வகைகள், மருத்துவ உபகரணங்கள் | S3 | ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல். |
| G4 | சித்த மருத்துவ மருந்துகள் | S4 | ஓட்டுவேலைகள், உலோக வேலைகள். |
| G5 | சிற்றுண்டி, மதிய உணவு | S5 | ஏற்றியிறக்கும் வேலைகளுக்குப் பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல். |
| G6 | மென்பானங்கள், பால், பால்மா வகைகள், தேயிலை, சீனி, வேறு உணவுப் பொருட்கள் சம்பந்தமானவை. | S6 | சுத்திகரிப்பு, ஏற்றியிறக்கல் வேலைகளுக்கு உழவு இயந்திரங்கள் வாடகைக்கு அமர்த்துதல். |
| G7 | கோலவுடைத்துணிகள், யன்னல் திரைச்சீலைத் துணிகள், நிலவிரிப்புகள், படுக்கை, மேசை விரிப்புகள், தலையணை உறைகள், மெத்தைகள், மழை அங்கிகள், கால்மிதிகள். | S7 | மின் மோட்டார்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிர்சாதனப்பெட்டிகள் திருத்தம். |
| G8 | தோற்பொருட்கள், பாதணிகள். | S8 | மின் கலங்களுக்கு மீள மின்வலுவூட்டல். |
| G9 | கட்டிடப் பொருட்கள் (சீமெந்து, ஓடு, கூரைத்தகடு, சீலிங், கம்பி வகைகள்). | S9 | இறப்பர் முத்திரை, புளொக் தயாரித்தல். |
| G10 | தீந்தைகள், நிறந்தீட்டும் பொருட்கள். | S10 | **அ). வாகனங்கள் பழுது பார்த்தல்- உள்வாரியான திருத்தம்,** இயந்திரம் மற்றும் வாகனப்பகுதிகளை பழுதுபார்த்தல் மற்றும் ஏனைய திருத்தங்கள். **ஆ). வாகனம் பழுது பார்த்தல் - வெளிவாரியான திருத்தம்** தகடுகள் ( Tinkering) பழுது பார்த்தலும், பெயின்ட் அடித்தலும். |
| G11 | கற்கள், சல்லிகள், கிறவல், கருங்கல் துகள், மணல், ABC கலவை. | S11 | வாகனம் சேவிஸ் செய்தல் |
| G12 | நீர் வழங்கு பொருட்கள், PVC குழாய்கள், நீர்த்தாங்கி, நீர்ப்பம்பிகள். | S12 | கணனிகள், பிறின்ரர்கள், ஸ்கானர்கள், தொலைநகல், கைவிரல் அடையாள இயந்திரங்கள், போட்டோப்பிரதி இயந்திரங்கள் திருத்தம். |
| G13 | வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள். | S13 | கணனிகள் சேர்விஸ் செய்தல். |
| G14 | தேங்காய் மட்டை, விறகு, கிடுகு, சாக்கு. | S14 | போட்டோப்பிரதி இயந்திரங்கள் சேர்விஸ் செய்தல். |
| G15 | எரிபொருள், உராய்வுநீக்கிகள், கிறீஸ். | S15 | CCTV Camera அதனுடன் தொடர்புடைய பொருட்கள் சேர்விஸ் செய்தல். |
| G16 | இரும்புப்பொருட்கள் | S16 | வளிச்சீராக்கி திருத்தம், சேர்விஸ் செய்தல். |
| G17 | பொருத்துகைப் பொருட்களும், கண்ணாடி வகைகளும். | S17 | தனியார் பாதுகாப்புச் சேவை வழங்குதல். |
| G18 | செரமிக் பொருட்கள் | S18 | மென்பொருள் வடிவமைப்பு மற்றும் மென்பொருள் மேம்படுத்தல். |
| G19 | வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர்கள், ரியூப் முதலியன | S19 | கனரக வாகனங்களினை வாடகைக்கு அமர்த்தல். |
| G20 | தீராந்திகள், நீப்பைகள், பலகைகள், பனைமரங்கள், சலாகைகள். | S20 | தனியார் சுத்திகரிப்பு, திண்மக்கழிவு சேகரிப்பு மற்றும் பிரித்தெடுப்பு சேவைகள் வழங்கல். |
| G21 | தீயணைப்புச் சேவைக்குத் தேவையான பொருட்கள். | S21 | வீதி வேலை, கட்டட நிர்மாணம், பூங்கா /மைதானம் பராமரிப்பு, கனரக வாகனங்கள் கையாளல் ஆகியவற்றிற்கு பயிற்றப்பட்ட தொழிலாளர்களை வழங்குதல். |
| G22 | மின்சார இயந்திரப் பொருட்கள், மின்கருவிகள், குளிரூட்டிகள், வீதி விளக்குகள். | S22 | திரவக்கழிவு, பரிகரிப்புத் தொகுதியை முகாமை செய்தல். |
| G23 | மேசன் வேலைக்குத் தேவையான பொருட்கள்(தூக்குக்குண்டு, நீர்மட்டம், மூலைமட்டம்) | S23 | சேதனப்பசளை உருவாக்கல், பொதியிடல், சந்தைப்படுத்தல். |
| G24 | தச்சு வேலைக்குத் தேவையான பொருட்கள்(வாள், சீவுளி, அரம்) | S24 | மீள் சுழற்சிக்குள்ளாக்கக் கூடிய திண்மக்கழிவுகளை மீள் சுழற்சியாளர்களிடம் எடுத்துச் சென்று சந்தைப்படுத்தல். |
| G25 | வேலைத்தள உபகரணங்கள்(மண்வெட்டி, சுத்தியல், கோடரி, கத்தி, சவள்) | S25 | வாடகைக்கு வாகனங்கள் வழங்குதல். |
| G26 | வெல்டிங், ரிங்கரிங் தொடர்பான பொருட்கள். | S26 | கோலவுடைகள், திரைச்சீலைகள் தைத்து வழங்குதல். |
| G27 | விளையாட்டு உபகரணங்கள், பொருட்கள். | S27 | குழாய்க்கிணறு அமைத்தல். |
| G28 | நூலகங்களுக்குரிய நூல்கள், சஞ்சிகைகள். | S28 | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் |
| G29 | தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கயிறு வகைகள். | | |
| G30 | சுத்திகரிப்புப் பொருட்களும், கிருமிநாசினிகளும். | | |
| G31 | கணனி, போட்டோப்பிரதி இயந்திரம், தொலைநகல், கைவிரல் அடையாள இயந்திரம் மற்றும் அவற்றிற்கான உதிரிப்பாகங்கள் வழங்கல். | | |
| G32 | குடிநீர் சுத்திகரிப்பிற்கான குளோரின். | | |
| G33 | CCTV கமரா, Web கமரா அதனுடன் தொடர்புடைய பொருட்கள். | | |
| G34 | வெற்றுபரல்கள். | | |
| G35 | தார் | | |

ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமான ரூபா.1000/= உடன் Vat 15% இற்கான காசுக்கட்டளை அல்லது தபாற்கட்டளை **"ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்"** என்ற பெயருக்குப் பெறப்பட்டு, இதற்கான விண்ணப்பத்தினையும் பூரணப்படுத்தி, வியாபாரபதிவுச் சான்றிதழ், நிறுவன பதிவுச்சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியுடன், பொருட்கள், சேவைகள் விவரணப் பட்டியலினையும் இணைத்துக் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2024" எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபால்மூலம் அல்லது நேரடியாக அனுப்பி வைத்தல் வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் சபையின் 'முன்னரங்கு அலுவலகத்தில்' நேரடியாக கடமை நாட்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணிவரை செலுத்த முடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படும்பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத்தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருட்கள், சேவைகளை வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள், சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கப்படும். வழங்குநர்களைப் பதிவுசெய்தல் - 2024 இற்கான படிவங்களை **01.11.2023** முதல் யாழ் மாநகரசபையின் கொள்வனவுக்கிளையில் பெற்றுக் கொள்ளமுடியும்.


விண்ணப்பங்கள் யாவும் அவற்றுக்கான கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் **"வழங்குநர்களைப் பதிவுசெய்தல்- 2024"** எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபால்மூலம் அல்லது நேரடியாக **"ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். **30.11.2023 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.**

**ஆணையாளர்,**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**
**01.11.2023**

(C-7532)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. மருத்துவமனையில் முன்னெடுத்த திடீர் விபத்து தொடர்பான விழிப்புணர்வு



(தருமபுரம்)

கிளிநொச்சி மருத்துவ மனையில் நேற்று திடீர் விபத்து தொடர்பான விழிப்புணர்வு நட வடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இரணைமடு சந்தியிலிருந்து கிளிநொச்சி மருத்துவ மனை வரை நோயாளர்கள் பல வாகனங்களில் மருத்துவ மனைக்கு கொண்டுவருவது போல சித்தரிக்கப்பட்டு குறித்த விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இராணுவத்தினர், பொலிஸார், மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவினர், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர், மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் தாதி யர்கள் என பலரும் தமதுபங் களிப்பை எவ்வாறு திடீர் விபத்து ஏற்படும் போது முன்னாயத்தங்கள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பது தொடர்பாக விழிப்புணர்வு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்கள். (5-6-316)



வடமாகாண பூப்பந்தாட்ட போட்டி நேற்று கிளிநொச்சியில் அமைந்துள்ள உள்ளக விளையாட்டு அரங்கில் ஆரம்பமானது. (படம்:-தேவானந்தம்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 350 |
| தக்காளி | 200 | 220 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 100 | 150 |
| கோவா | 250 | 200 | 300 |
| கரட் | 350 | 350 | 400 |
| பூசணி | 80 | 80 | 100 |
| புடோல் | 180 | 200 | 250 |
| வாழைக்காய் | 200 | 180 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 300 |
| பாகற்காய் | 450 | 450 | 400 |
| வெண்டக்காய் | 240 | 180 | 350 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 200 | 250 | 300 |
| பீற்றூட் | 140 | 150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 450 | 500 |
| முருங்கைக்காய் | 300 | 500 | 400 |
| போஞ்சி | 400 | 550 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70-90 |
| இராசவள்ளி | 400 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 480 |
| முள்ளங்கி | 100 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 150 | 50 |
| ஈரப்பலா | 120 | 150 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2955

Search for people, places and things


### தக்ஷி




### தீபக்




### ஜனனி




### சத்தியா




### அலைக்ஸ்




### ராஜி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
> – காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உண்மைகளை ஏற்பதில்கூட எங்களிடம் ஏற்ற இறக்கங்கள்

நடுவுநிலையின் இயல்பு யாது? என்று கேட்டால், சரிக்குச் சரியும் பிழைக்குப் பிழையும் இடுவதுதான் நடுவுநிலையின் இயல்பு எனலாம்.

அதாவது பதிலளிப்பவர் யார் என்று ஆராயாமல், பதில் எவ்வாறாக உள்ளதென்பதை ஆய்ந்து அதற்கான பெறுமானத்தை வழங்குவதுதான் நடுவுநிலையின் தன்மை.

ஆக, நடுவுநிலை நின்று சிந்திப்பவர்கள் ஒருபோதும் பக்கம் சாரமாட்டார்கள்.

அதேவேளை பதிலளிப்பவர் யார் என்று பார்த்து விமர்சனம் செய்யவும் மாட்டார்.

ஆனால் எங்கள் அரசியலில் அந்த நடுவுநிலை தவறாத மேன்மை அறவே இல்லை எனலாம்.

இதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியில் தற்போது எழுந்துள்ள சர்ச்சையை நல்ல உதாரணமாக முன்வைக்கலாம்.

ஆம், தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தர் வயது மூப்பின் காரணமாகத் தனது பதவியை விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்வைத்த கருத்து கட்சிக்குள் சலசலப்பை – பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து எதிர்க்கருத்துக்கள் எழுந்துள்ளன.

என்னைப் பதவி விலகச் சொல்வதற்குச் சுமந்திரன் யார் என்று இரா.சம்பந்தர் தன்னிடம் கேட்டதாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

அதேநேரம் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான தவராசா அவர்கள் சுமந்திரனின் கருத்துத் தொடர்பில் அவசர அவசரமாகக் கடிதமொன்றை இரா.சம்பந்தருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அதில் வளர்த்த கடா மார்பில் பாய்ந்துவிட்டது. ஏலவே பல தடவைகள் நாம் கூறிய கருத்துக்களை நீங்கள் செவிமடுக்கவில்லை. இப்போது உங்கள் தலைமைக்கே ஆபத்து வந்துவிட்டது என்பதான தகவல்கள் அடங்கியுள்ளன.

இதுதான் என்றால் இல்லை. வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களும் சம்பந்தர் தமிழினத்தின் அடையாளம். எனவே அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை – கட்சித் தலைமையைத் துறக்க வேண்டியதில்லை என்பதாகத் தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

இங்கு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் முன்வைத்த கருத்துக்கு புறவயக் கருத்தாக நீதியரசர் விக்னேஸ்வரனின் கருத்தை எடுத்துக் கொள்ளலாம்.

எதுவாயினும் மேற்போந்த கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்யும்போது பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு எதிர்க்கருத்து உடையவர்கள்; சம்பந்தர் தொடர்பில் சுமந்திரன் கூறிய கருத்தை தமக்குச் சாதகமாக ஆக்க முற்பட்டுள்ளனர்.

ஆனால் உண்மையில் இரா.சம்பந்தர் அவர்கள் முதுமை காரணமாக இயலா நிலைக்கு ஆளாகியுள்ளார்.

எனவே அவர் இருக்கும்போது கட்சியைப் பலப்படுத்தும் வகையில் புதிய தலைமையிடம் கட்சியைக் கையளித்து கௌரவமாக அதனை வழிப்படுத்துவதுதான் ஒரு தலைவனுக்கு அழகு.

அந்த உண்மையை உணர்வதில் கூட எங்களிடம் எத்தனை ஏற்ற இறக்கங்கள். என்ன செய்வது. இதுதான் எங்கள் தலைவிதியாயிற்றே.

# இலங்கை விடயத்தில் ஐ.எம்.எப் கடுமையாக இருக்க வேண்டும்

## ஷர்மினி குரே

**(கொழும்பு)**

**இலங்கையின் கட்டமைப்பு சீர்திருத்தங்களில் சர்வதேச நாணய நிதியம் கடுமையாக இருக்க வேண்டும் என அதன் திறன் அபிவிருத்தி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷர்மினி குரே தெரிவித்துள்ளார்.**

குறைந்த வரிவருவாய் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை மறுசீரமைக்க தவறிய காரணத்தினால் இவ்வாறு கடுமையாக இருக்க வேண்டும் என கூறியுள்ளார்.

இலங்கைக்கு முன்வைக்கப்பட்ட 17 திட்டங்களில் கட்டமைப்பு சீர்திருத்தங்களிலேயே சர்வதேச நாணய நிதியம் மிகவும் கடுமையாக இருந்திருக்க வேண்டும்.

மேலும் கடனை பெற்றுக் கொள்ளும் நாடுகளைப் பாதுகாப்பதில் சர்வதேச நாணய நிதியம் இன்னும் வலுவாக முன்னேற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கை போன்ற நெருக்கடியை எதிர் கொள்ளும் நாடுகளுக்கு கடன் பேச்சுக்கள் முடிவடையும் வரை ஆரம்ப நிதியை மட்டுமே வழங்க வேண்டும் என ஷர்மினி குரே தெரிவித்துள்ளார். (5-6)

# ஜனாதிபதியின் செயற்பாட்டினால் பெரமுன மீது மக்கள் அதிருப்தி

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் காரணமாக பொதுஜன பெரமுன கட்சியின் மீது மக்கள் அதிருப்தியை கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மைய அமைச்சரவை மாற்றத்தின்போது பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் புறக்கணிக்கப்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் நாமல் ராஜபக்ஷவின் தலைமையிலான கலந்துரையாடல் கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மக்களுக்கான நிவாரணங்களை வழங்குமாறு தாம் விடுத்த கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி செவிசாய்க்கவில்லை. மாறாக சர்வதேச நாணய நிதியத்தால் வலியுறுத்தப்பட்ட சீர்திருத்தங்களை செயற்படுத்துவதன் மூலம் மக்களுக்கு துயரத்தையே வழங்கி வருகிறார் எனவும் மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டண உயர்வு மற்றும் தொழில்வல்லுநர்கள் மீது விதிக்கப்படும் வரிகள் உள்ளிட்ட பெரும்பாலான பிரச்சினைகளுக்கு கட்சியே காரணம் என்று பொதுமக்கள் குற்றம் சுமத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் இதன்போது குறிப்பிட்டுள்ளனர். (5-6)

## 785/1 வழித்தட பேருந்து சேவை இன்று ஆரம்பம்

(அராலி)

யாழில் இருந்து காரைநகரை நோக்கி (785/1) வழித்தட பேருந்து சேவை இன்று ஆரம்பமாகிறது.

இச்சேவை முதற் கட்டமாக மு.ப 10 மணிக்கு (785/1 வழித்தடம்) காரைநகரிலிருந்து பயணத்தை தொடங்கி யாழ் சென்று மீண்டும் மதியம் 1.20 இற்கு யாழிலில் இருந்து பயணத்தை ஆரம்பித்து காரைநகரை சென்றடையும். (5-6-104)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் 54 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இலங்கை மின்சார சபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டு சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் இரத்ததான முகாம் யாழ்ப்பாணம் இலங்கை மின்சார சபை பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (5-6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக் கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** பகல அளுத்வத்த, புபுதுகம, RDW கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

## யாழில் அதிகரிக்கும் மோ.சைக்கிள் திருட்டுக்கள்

(அராலி)

யாழ்.குடாநாட்டில் கடந்த எட்டு மாதங்களில் 19 மோட்டார் சைக்கிள்கள் திருட்டுப் போய் உள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

நகரப் பகுதிகளில் நிறுத்திவிட்டு கடைகளுக்கு செல்லும் பொழுது இவ்வாறான திருட்டு சம்பவங்கள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன.

தமது மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்கள் தொடர்பில் உரிமையாளர்கள் மிக அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

திருடப்படும் மோட்டார் சைக்கிள் திட்டமிட்ட குற்றச் செயல்கள் மற்றும் உதிரி பாகங்களாக மாற்றி விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் ஒரு சில கும்பல்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கும்பல் தொடர்பில் தகவல்கள் தெரிந்தவர்கள் யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு 021 222 2222 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தகவல் தெரிவிக்க முடியுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-6-104)

## ஐஸ்போதையுடன் சிறைச்சாலை சென்ற நபரொருவர் கைது

(கொழும்பு)

கோழி இறைச்சிக்குள் ஐஸ் போதைப்பொருளை மறைத்து வைத்த களுத்துறை சிறைச்சாலையில் உள்ள கைதியை பார்க்கச் சென்ற நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் கொணபொல, படுவிட்ட பிரதேசத்தை சேர்ந்த 45 வயதுடைய நபர் ஆவார். (5-6)

> **வடமாகாண மரநடுகை மாதம்**
> **கார்த்திகை - 2023**
> **'மரங்களை நாட்டுவதற்கான மிகச்சிறந்த காலம் இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்.'**
> **-சீனப் பழமொழி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

25

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### சாவகன் மைந்தன் (1262-1277)

சாவகன் மைந்தன் என்பவர் தாய்லாந்து நாட்டில் இருந்த தாமிரலிங்க இராச்சியத்தை 1262 ஆம் ஆண்டில் இருந்து 1277 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்த அரசராவார். இக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தையும் ஆண்டதாக கூறப்படுகிறது.

இவரின் தந்தையான சந்திரபானு தாய்லாந்து நாட்டு தாமிரலிங்க அரசராக இருந்தார். சந்திரபானு, 1250களில் பாண்டியர் ஆட்சியின் கீழிருந்த இலங்கையின் மீது படை எடுத்தார்.

அப்படை எடுப்புக் காலத்தில் தாமிரலிங்கத்தை ஆண்ட இவரின் தந்தைக்கு உதவுவதற்கு இல்ங்கை வந்து அங்குள்ள இரண்டாம் பராக்கிரமபாகு என்ற சிங்கள அரசனால் தோற்கடிக்கப்படான். பாண்டியர் பேரரசனான முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் என்பவனிடம் இவனும் இவன் தந்தையான சந்திரபானுவும் 1258 இல் பணிந்து அவனின் கீழ் வட இலங்கையை ஆண்டனர். அந்தக் காலத்தில் பாண்டியனுக்கு வரியாக ஆபரணங்களும் யான்னைகளும் அனுப்பப்பட்டன.

இலங்கையின் செல்வவளத்தை அறிந்த தாமிரலிங்கத்தினர் அதை அடைய எண்ணி பாண்டியப் பேரரசை எதிர்த்து போர் தொடுத்தனர். முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியன் தம்பியான் இரண்டாம் சண்டையவர்மன் வீரபாண்டியன் இவர்களை 1262-1264 களில் எதிர் கொண்டு சாவகன் தந்தையான சந்திரபானுவைக் கொன்றான். அதை திரிகோணமலையில் பொறித்தும் வைத்தான்.

அதனால் சாவகன் தன் சேனையுடன்பின் வாங்கி மீண்டும் பாண்டியப் பேரரசை எதிர்க்கத் தருணம் பார்த்திருந்தான். 1270 களில் தன் படை வலிமையை அதிகரித்து மீண்டும் பாண்டியர் சேனையுடன் போர் புரிந்து பாண்டியப் பேரரசனான முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் என்பவனால் தோற்கடிக்கப்பட்டான்.

சாவகர் பாண்டிய அரசின் உதவி பெற்று வட இலங்கையை ஆண்டு பின் அவர்களின் மேலேயே போர் தொடுத்ததால், சாவகர் மீது நம்பிக்கை இழந்த பாண்டிய அரசு தன் அமைச்சனான குலசேகர சிங்கையாரியன் வட இலங்கையை ஆள வைத்தான். அதன் பின் சாவகனின் தாய்லாந்து நாட்டு தாமிரலிங்க அரசு மற்ற பக்கத்து அரசுகளால் துண்டாடப்பட்டது.

பேராசிரியர் பத்மநாதன் யாழ்ப்பாணத்தில் சாகவனது ஆட்சி ஏற்பட்டிருக்கலாம் என்பதற்கு இங்கு புழக்கத்திலிருக்கும் சாவன் கோட்டை, சாவாங்கோட்டை, சாவகச்சேரி முதலான இடப்பெயர்களை ஆதாரமாகக் காட்டுகிறார். பாளி, சிங்கள இலக்கியங்களில் சாவக மன்னர்களது ஆதிக்கம் நிலவிய இடங்களில் சில திருகோணமலை, யாழ்ப்பாண மாவட்டங்களில் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டாலும் பெரும்பாலான இடங்கள் வன்னிப்பிராந்தியத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனால் அவர்களின் ஆதிக்க மையம் வன்னிப்பிராந்தியத்தில் இருந்ததாகச் சிந்திக்க இடமுண்டு. அவ்வாறு கருதுவதற்கு வேறும் சில ஆதாரங்கள் காணப்படுகின்றன.

### யாழ்ப்பாண அரசு பற்றி.....

யாழ்ப்பர்ண அரச பொருளாதாரம் கிட்டத் தட்ட முழுவதுமாக 15 ஆம் நூற்றாண்டு வரை விவசாய அடிப்படையில் காணப்பட்டது. 15 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு, பொருளாதாரம் பல் வகைப்பட்ட, வாணிகமாக்கப்பட்டு, இந்தியப் பெருங்கடலில் வியாபித்த ஒன்றாகியது.

1344 இல் பயணித்த இப்னுபதூதா, யாழ்ப்பாண அரசு பாரிய வணிக அரசு என்பதையும் அது கடல் கடந்த தொடர்புகளைக் கொண்டுள்ளது என்பதையும் அவதானித்தார். அரச வாணிபங்கள் தென்னிந்தியா தொடர்புடைய கடல் சார்பானதாக, சுயாதீன வர்த்தகத்தை வளர்த்துக் கொண்டதாக விருந்தது. விவசாய மற்ற அரச பாரம்ரியம் பாரியளவு கரையோர மீன் ிடி, படகுகளின் அதிகரிப்பு, கடல் வர்த்தக வாய்ப்பு அதிகரிப்பு என்பதால் பலமுள்ளதாகியது. செல்வாக்குச் செலுத்தும் வர்த்தக குழுக்கள், குறிப்பாக தென்னிந்தியக் குழுக்களும் மற்றவர்களும் அரச தலைநகர், துறைமுகம், சந்தை நிலையங்கள் ஆகியவற்றில் தங்கியிருந்தனர். கைவினைஞர் குடியிருப்புக்கள் உருவாக்கம், திறன் மிக்க தொழிற் குழுக்களான தச்சர்கள், கற்கொத்தன்கள், நெசவாளிகள், உலர்த்துபவர்கள், பொற்கொல்லர்கள், கொல்லர்கள் ஆகியோர் கிராமங்களில் தங்கியிருந்தனர். அதனால், பல தரப்பட்ட சமூக பொருளாதார விவசாயச் செயற்பாடுகள், வர்த்தகம், கைப்பொருள் உற்பத்தி ஆகியன சிறப்பான உருவாக்கம் பெற்றன.

யாழ்ப்பாண அரசு இலங்கையில் ஏனைய அரசுகளான கோட்டை, கண்டி ஆகியனவற்றை விட குறைந்தளவு நிலமானியத்தைக் கொண்டு இருந்தது. அதனுடைய பொருளாதாரம் நில, அதன் உற்பத்தி வணிக நடவடிக்கை[illegible] வணிக நடவடிக்கையைக் கொண்டு இருந்தது. யாழ்ப்பாண பாதுகாப்புப் படைகள் ஊழிய மானிய வரி இல்லாமலும், அரசனுடைய சேவையில் இருந்தவர்களுக்கு ஊதியம் பணமாகக் கொடுக்கப்பட்டது. அரசனின் உத்தியோகத்தர்களான முதலியார்கள் ஊதியமும் பணமாகக் கொடுக்கப்பட்டதுடன், குறிப்பிட்டளவு எண்ணிக்கையிலான இந்துக் கோயில்கள் சொந்தமாக பாரியளவு சொத்துக்களை தெற்கில் இருந்த பௌத்த கோயில்கள் கொண்டிருந்தது போலல்லாது காணப்பட்டன. கோயில்களும் நிருவாகிகளும் அரசனில் சார்ந்திருந்தனர். அரசின் வரிகள் அனேகம் யானைகளாக வன்னியிலிருந்து வந்தன.

### மறுபக்கத்தில் சேது என்று பொறிக்கப்பட்ட சேது நாணயம்

நிலவரிக்கு அப்பால், வாழை, தென்னை, பாக்கு ஆகியன உள்ளவற்றிற்கு தோட்ட வரி இருந்தது. பனை, வேம்பு, இலுப்பை ஆகியவற்றுக்கு மரவரி காணப்பட்டது. ஒவ்வொரு சாதி அல்லது வணிகர் சங்க அங்கத்தவர்களிடம் தொழில் வரியும், மற்றவர்களிடம வர்த்தக வரியும், உடைகளுக்கு (உடைகள் பிரத்தியோகமாகவல்லாது அலுவலக முத்திரையைக் கொண்டு இருக்க வேண்டும்) முத்திரைவரியும், உணவுப் பொருட்களுக்கு தரகு அல்லது வரியும் மற்றும் துறைமுக, சுங்கவரிகளும் பெறப்பட்டன. கொழும்புத்துறை தீபகற்பத்தை பிரதான நிலத்துடன் பூநகரியில் படகு சேவை மூலம் இணைத்தது. அது பிரதான துறைமுகங்களில் ஒன்றாகவும் பச்சிலைப் பள்ளியைக் கடந்து சுங்கச் சோதனை பகுதியும் இருந்தது. யானைகள் தென்சிங்கள அரசுகள், வன்னிப் பகுதி ஆகியவற்றிலிருந்து யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்து வெளிநாட்டு வாங்குனர்களுக்காக விற்கப்பட்டன. ஊருகாத்துறை எனப்பட்ட தற்போது ஊர்காவற்றுறை எனப்படும் குடாவில் வைத்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டன. இது சுருக்கமாக போர்த்துக்கேயத்தில் "காஸ்டொஸ் எலிபண்டிஸ்" ( Caes dos elephantess"யானைகளின்குடா) என அழைக்கப்பட்டது. இறந்தவர்களை தகனம் செய்ய யாழ்ப்பாணத்தில் அனுமதிக் கட்டண வரி இருந்தது.

இந்தியாவிலிருந்து ஆரம்ப காலத்தில் குடியேறியவர்கள் முதற்கொண்டு தொடர்ச்சியாக வரலாற்றை சைவசமயம் இலங்கையில் கொண்டுள்ளது. பௌத்த சமயம் செயற்பாட்டில் இருந்த போது கூட இந்து சமய வழிபாடு பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இலங்கையில் சோழர் காலத்தில், கிட்டத் தட்ட 9 ஆம் 10 ஆம் நூற்றாண்டுகளில், அலுவலக சமயத் தகுதியை [illegible] பெற்றிருந்தது. சோழருக்குப் பின் ஆட்சி செய்த கலிங்கமாகன் அக்காலத்தில் சுதேச இலக்கிய இந்து மறுமலர்ச்சிக்கு உதவினான்.

யாழ்ப்பாண அரச காலத்தில் சைவம் அரச சமயமாக இருந்து எல்லாச் சலுகையையும் பெற்றுக் கொண்டது. இந்திய இந்து சமய யாத்திரைத் தலமாக மிகவும் அறியப்பட்ட இராமேசுவரம் கோயிலை தங்கள் மூதாதையர் பரிபாலித்ததன் நிமித்தம் ஆரியச் சக்கரவர்த்தி அரசு சைவம் தொடர்பில் அதற்குரிய சேவையைச் செய்வதிலும் பரிபாலிப்பதிலும் மிகவும் விழிப்புள்ளதாக இருந்தது. குறிப்பின்படி, அரசனின் தலைப்பு "சேதுகாவலன்", அதாவது இராமேசுவரம் மற்றொரு பெயரான "சேது" என்பதைக் கொண்டிருந்ததாக ஊகிக்க முடிகிறது. "சேது" என்பது நாணயம், கல்வெட்டு அரச அடையாளமாக பயன்படுத்தப்பட்டது.

கோட்டை அரசின் சார்பாக யாழ்ப்பாண அரசை ஆண்ட சப்புமால் குமாரயா நல்லூர் கந்தசுவாமி கோவில் புனரமைப்பு அல்லது கட்டுமானத்திற்கு உதவினான். சிங்கை பரராசசேகரன் சத்தானந்தர் கோயில், வைகுந்தப் பிள்ளையார் கோயில், வீரகாளியம்மன் கோயில் ஆகியவற்றைக் கட்டினான். அவன் கட்டிய குளமான யமுனை ஏரியை, வட இந்தியாவிலுள்ள இந்துக்களினால் புனிதமாக கருதப்பட்ட யமுனை ஆறு தண்ணீரினால் நிரப்பினான். இவன் திருக்கோணேச்சரத்திற்கு அடிக்கடி சென்று தரிப்பவன் ஆவான்.

அரசன் செயவீரசிங்கை யாரியன் தற்போது கோணேஸ்வரம் கோயிலின் ஸ்தல புராணம் என்று அறியப்படும் தக்சணகைலாச புராணம் என்பதனை செய்யுள்களாக கோயிலின் பாரம்பரிய வரலாறாகத் தொகுத்தான். பெரியகோயில்கள் சாதாரணமான அரசர்களினால் பராமரிக்கப்பட்டு, கோயிலில் வேலை செய்வோருக்கு அரச கருவூலத்திலிருந்து சம்பளம் கொடுக்கப்பட்டது. இந்தியாவிலும் இலங்கையின் பிற பகுதிகளிலும் போலல்லாது, சமயநிலை நாட்டல்கள் சுயாட்சி உள்ளதாகவும் பாரிய நில அறக்கொடையாகவும் வரிக்கு உட்பட்டதாகவும் இருந்தது.

### தேர் வீடு, நல்லூர் கந்தசுவாமி கோவில்

சிவன் அதிகளவில் முதன்மையான ஏற்றுக்கொள்ளப்பட்டும், இலிங்கம், சிவனின் ஒட்டு மொத்த சின்னமாகவும் இருந்ததோடு, புண்ணியத் தலங்கள் சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டும் இருந்தன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச ஊழியர்...

கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் ஏற்பட்ட பாரிய பொருளாதார வீழ்ச்சியினால் நாடு பல நெருக்கடிகளை சந்தித்தது. தற்போதுதான் படிப்படியாக அந்த சூழல் மாறி நல்லதொரு நிலை உருவாகி வருகின்றது.

எனினும் கடன் மறுசீரமைப்பு முடியும் வரை நாடு மீண்டும் கடன் பெற முடியாது. எனவே யார் ஆட்சிக்கு வந்தாலும் இந்தப் பொருளாதாரப் பிரச்சினைக்கு சரியான தீர்வைக் காண வேண்டும்.

மேலும் கடந்த ஆண்டு மொத்த வரி வருமானத்தில் 72% அரச சேவைக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்குவதற்காகச் செலவிடப்பட்டது.

சமுர்த்தி மற்றும் ஏனைய மானியங்களுக்கு ஐநூறு பில்லியன் செலவிடப்பட்ட போது திறைசேரிக்கு கிடைத்த வரி வருமானத்தில் ஒரு சதம் கூட மீதம் இருக்கவில்லை.

இவ்வாறான நிலையில் அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை எவ்வாறு அதிகரிப்பது? என அமைச்சர் பந்துல குணவர்த்தன கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்நிலையில், அரச ஊழியர்களுக்கு முறையான சம்பள அதிகரிப்பு வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பிக்மீ ஆட்டோ...

மீது, தரிப்பிட சாரதிகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தாக்குதலுக்கு இலக்கான பிக்மீ சாரதி யாழ்.பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு அண்மையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் நின்று ஒருவர் "பிக்மீ" செயலி ஊடாக முச்சக்கரவண்டி ஒன்றினை வாடகைக்கு அமர்த்தியுள்ளார். அதனை அடுத்து அவரை ஏற்றுவதற்காக குறித்த முச்சக்கரவண்டி அப்பகுதிக்கு வந்துள்ளது.

அதன்போது, அப்பகுதியில் தரிப்பிடத்தில் நின்று முச்சக்கரவண்டி சேவையில் ஈடுபடுவோர், தரிப்பிடத்தில் நிற்கும் தமது முச்சக்கரவண்டியையே வாடகைக்கு அமர்த்த வேண்டும் என முரண்பட்டு, அங்கு வந்த முச்சக்கரவண்டி மீதும் சாரதி மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

அதனை அடுத்து பாதிக்கப்பட்ட சாரதி யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ம-7,33)

## புதிய வேலை...

வுத் தயாரிப்பாளருக்கு அறிவுறுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியது.

பிரதமரின் தலைமையில் கூட்டப்பட்டுள்ள அக்குழுவில் கருத்தாக்கப் பத்திரத்தை ஆராய்ந்து கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தல்களுடன் கூடிய அறிக்கையொன்று அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

குறித்த விதப்புரைகள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரால் இவ்விடயங்களுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்தாக்கப் பத்திரத்தை அடிப் படையாகக் கொண்டு சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 3 மாதங்களுக்கு...

கட்டணத்தை திருத்த அமைச்சரவை இன்று (நேற்று) ஒப்புதல் அளித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த வருடம் ஒக்டோபர் மாதம் மின் கட்டண திருத்தம் செய்யப்பட்டுள்ளதால், அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி மின் கட்டணம் திருத்தப்படாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதன்படி, அடுத்த மின்கட்டண திருத்தம் ஏப்ரல் 1, 2024 அன்று மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளார். (ம-7)

## மண்ணெண்...

இதன்படி, ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், ஒட்டோ டீசல் 356 ரூபாயிற்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு லீற்றர் சுப்பர் டீசல் 431 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 7 ரூபாயினால் அதிகரிக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலை 249 ரூபாயாகும்.

இதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 9 ரூபாயினால் குறைக்கப்பட்டு புதிய விலை 356 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது. (ம-7)

## இந்நாட்டின்...

தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற Oyslans நிறுவனத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். (ம-7)

## பொருட்களின்...

வற் (VAT) எனப்படும் பெறுமதி சேர் வரியினை 18 சதவீதமாக அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இதற்கமைய எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இது நடைமுறைக்கு வரும் என அவர் தெரிவித்தார்.

தற்போது வற் (VAT) வரி 15 சதவீதமாக நடைமுறையில் இருக்கின்றது.

2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் அரசாங்கத்தின் வரி வருமானம் 51 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அமைச்சரவை தீர்மானங்கள் அடங்கிய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட வரி வசூல் இலக்குகளை அடைய முடியவில்லை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்டதன் பிரகாரம் வரி வருமானம் மற்றும் முதன்மை சமநிலை இலக்குகளை அடைவதற்காக வற் (VAT) ஐ அதிகரிப்பதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார். (ம-7)

# பணவீக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

மக்கள் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது முக்கியமான அறிவித்தலொன்றினை வெளியிட்டுள்ளது.

அவ்வகையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, ஒக்ரோபர் மாதத்தில் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலின்படி, "2023 செப்ரெம்பர் மாதத்தில் 1.3 சதவீதமாக காணப்பட்ட பணவீக்கம் இம்மாதம் 1.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.

உணவுப் பணவீக்கம் மாறாமல் தொடர்ந்து 5.2 சவீதமாக காணப்படுகிறது" என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7)

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3526
சீட்டிழுப்பு திகதி 31.10.2023
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 16 32 56 73
F
23778
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.10.31
சீட்டிழுப்பு இலக்கம் - 1314
Z 27 34 35 53 Z
41563

லக்கி 7
திகதி 31.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0110
L7 இலக்கம் 2 1
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 7 5 5 1 9 7

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.31
சீட்டிழுப்பு இலக்கம் 593
சிம்மம் 11 22 34 59 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 31/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1632
N 12 43 44 46 50
34809

மஹஜன சம்பத
திகதி 2023/10/31
சீட்டிழுப்பு இலக்கம் 5284
K 8 1 8 6 4 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2258
வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.31
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 16 47 57 61 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,676,884.00
DLB

சனிதா
திகதி 2023.10.31 வெற்றி வாரம் 4419 வர்ணம் பச்சை
03 17 38 50 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,382,400.00
16421
DLB

சசிரி
வெற்றி வாரம் 396
சீட்டிழுப்பு திகதி 2023.10.31
05 10 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,344,160/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3970
வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.10.31
தினம் செவ்வாய்க்கிழமை
12 22 47 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,112,091.20
211723 514
DLB

திகதி 31.10.2023 வெற்றி வாரம் 1434
G 10 20 30 34 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 459,113,044.20
991942 907
DLB தொலை பேசி: 011-2 333 540-47 Web: www.dlb.lk

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2084
சீட்டிழுப்பு திகதி: 2023.10.31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,741,504/-
42 54 64 71 B
141348
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை




எமது சக நன்னடத்தை உத்தியோகத்தர்
திரு. கணேசு கமலதாசன்
அவர்களின் அன்புத் தந்தையார்

## திரு. நாகலிங்கம் கணேசு

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆழ்ந்த துயரில் பங்குகொள்ளும்
நன்னடத்தை உத்தியோகத்தர் சங்கம்,
வடக்கு மாகாணம்.

(C-7534)


# IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes

இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.

077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17620)


# நாட்டில் உரத்துக்கு தட்டுப்பாடில்லை

(கொழும்பு)

நாட்டில் தற்போது உரத்துக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பெரும்போக பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் யூரியா உரத்துக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சில விவசாய அமைப்புகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் உண்மைக்கு புறம்பானவை என குறித்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17618)

076 825 7716 (ஆகாஸ்)


# கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை மானிப்பாய்

பொது சத்திரசிகிச்சை நிபுணர்
DR.S.மதிவாணன்
MBBS, MD SURGERY, MRCS (ENG),
FELLOWSHIP IN VASCULAR IN GENERAL SURGERY (UK)
CONSULTANT SURGEON
BOARD CERTIFIED IN GENERAL SURGERY WITH VASCULAR INTEREST

திங்கள் மற்றும் சனி கிழமைகளில் 4.30 PM

சத்திர சிகிச்சை மற்றும் ஆலோசனை வழிகாட்டல்

முதல் 10 சத்திரசிகிச்சை ஆலோசனைகளும் (Consultation Channeling) இலவசமாக நடைபெறும்

விசேட குருதிக்குழாய் சத்திரசிகிச்சை கிளினிக்
- ஆறாத புண்களுக்கான சிகிச்சை
- கால் இரத்த நாள் (வரிக்கோஸ்) வீக்கத்திற்கான சிறப்பு சிகிச்சை
- கால் வீக்கத்திற்கான சிகிச்சை
- நீரிழிவுநோயின் பின்னர் கால்களை பரிசீலித்தலும் தீர்வு வழங்குதலும்

பொது சத்திரசிகிச்சை
- மார்பு கட்டிகள், நீர் கட்டிகள்
- வயிற்று நோவு
- தைரொயிட் பிரச்சினைகள்
- பித்தப்பை உபாதைகள்
- ஹேணியா
- மலவாசல் இரத்தக்கசிவுகளுக்கான ஆலோசனைகளும் தீர்வுகளும்

(C-7536)

முன் பதிவுகளுக்கு :- 0770661031 0212255157


# ENGLISH LITERATURE For GRADE 9

மிக விரைவில் ஆரம்பம் - பதிவுகளுக்கு
077 792 3653 (TP, Whatsapp)

P.THARMAKUMARAN (P.Mathan)
BA(Eng.Lit), Dip.in.Eng

NEWTON
Group Classes Nallur
(Near TCT Super Market) (17630)

# அமெரிக்க லொத்தர் விசா

- இன்னும் 6 நாட்கள் மட்டுமே
- பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
- அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna.
077 755 4528
(17621)

# VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜேர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

S.lankan Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

(C-7539)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

# அமெரிக்க அதிஸ்ட விசா

இன்னும் 03 நாட்களில் நிறைவடைகின்றன

LOADING
0768226244
55000 இலவச விசாக்கள்
நீங்களும் அமெரிக்காவில்...

V2 Travels (C-7539)

0777469777 0743900353 0768226237 0768226240 0777068777 0764550670 0764550679 0768226230
0768226243 0776697960 0764550675 0768226238 0764550671 0777718322 0777726322 0743900353
0777720322 0764550674 0776699892 0768226242 0768226236

V2 TRAVELS


# யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (Stanley College)

## க.பொ.த(உ/த) 2022(2023)

பரீட்சையில் 3A சித்திபெற்று எமது கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவர்களை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்





| செல்வன் | செல்வி |
|---|---|
| சுதாகரன் பானுசன் | மதுஷாலினி மதிவதனன் |
| விஞ்ஞானப் பிரிவு - 3A | கணிதப் பிரிவு - 3A |
| District Rank - 68 | District Rank - 38 |
| Island Rank - 994 | Island Rank - 680 |
| Z-Score - 2.0405 | Z-Score - 2.1550 |

மேற்படி மாணவர்களையும் இவர்களது வெற்றிக்கு உழைத்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(17627)

2000 Batch
பழைய மாணவர்கள்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தின்
முன்னாள் பிரதேச செயலாளர்

## உயர்திரு.ஆழ்வாப்பிள்ளை சிறி

(இலங்கை நிர்வாக சேவை விசேட தரம்)

எமது பிரதேச செலகத்தின் பிரதேச செயலாளராக 2017.08.01 திகதியிலிருந்து 06 வருடங்கள் சிறப்பாக சேவையாற்றி இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்று வடமாகாண சபை அமைச்சில் இன்று கடமைகளைப் பொறுப்பேற்கும் மதிப்பிற்குரிய உயர்திரு. ஆழ்வாப்பிள்ளை சிறி அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல சிறப்புக்கள் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம், வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை.

(C-7535)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org